OPEN ACCESS

# Totemic Systems is the Precursor of Religion

[1]Dr. B. Sankareswari* and [2]S. Kalaiselvam
[1]*Assistant Professor, School of Tamil Studies*
*Madurai Kamaraj University, Madurai, Tamil Nadu, India*
https://orcid.org/0000-0002-5389-4533

[2]*Ph.D. Research Scholar, Madurai Kamaraj University*
*Madurai, Tamil Nadu, India*

Volume: 4

Issue: 4

Month: April

Year: 2020

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 23.3.2020

Accepted: 20.3.2020

Published: 01.04.2020

Citation:
Sankareswari, B., & Kalaiselvam, S. (2020). Totemic Systems is the Precursor of Religion. *Shanlax International Journals of Tamil Research*, *4*(4), 44–53.

DOI:
https://doi.org/10.34293/tamil.v4i4.2416

*Corresponding Author:
sankaritamil@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

**Abstract –** Any society with a long history of tradition and Culture has its origin and roots in religion. From this religious tradition only next the stages of development of tradition and culture developed. It started from the ancient people to the present days casteist society. The religion developed and evolved by stages into the present day religion proper. This research paper states that the totemic system created the tendency for the later on religion. In a society, religion creates the barrier between what is sacred and what is unsacred. Totems are the basic, primitive tendencies for the later on religion. An anthropologist who studied about totems supports this argument. Totemic system is the precursor to religion and it anticipates religion later on, then comes the next stages of worship of forefathers worship of the relics, and the faith in rituals are effects of religion.

**Key Words:** Folklore, Folk religion, Clan, Totemic worship, Ancestor worship.

## References

1. Subramaniyan, D. (2016). *Tholpazhangkalam*. p. 192.
2. Bhakthavatsala Bharathi. (2016). *Panpaattu Maanidaviyal*. p. 505-506.
3. Dhananjeyan, A. (2012). *KulakkuriyeyalumMeenavar Vazhakkarukalum*, p. 4.
4. Bhakthavatsala Bharathi. (2016). *Panpaattu Maanidaviyal*. p. 507.
5. Melathu, p. 509.
6. Melathu, p. 509.
7. Melathu, p. 509-510.
8. Deviprasd Chattopadhyaya. (2014). *Ulagayatham,* p. 110.
9. Goindasamy, Ve. (2012). *India Thathuva Marabu: silaparvaikal Marxiaoli katturaikal-3*, p. 95.
10. Deviprasd Chattopadhyaya. (2014). Ulagayatham, p. 105.
11. Goindasamy, Ve. (2012). *India Thathuva Marabu: silaparvaikalMarxiaoli katturaikal-3*. p. 98.
12. Bhakthavatsala Bharathi. (2016). Ilakkiya Maanidaviyal. p. 176.

# சமயத்தோற்றத்தில் குலக்குறி வழிபாடு

***முனைவர் பா. சங்கரேஸ்வரி***
உதவிப் பேராசிரியர், தமிழியல் துறை, தமிழியற்புலம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை

***சு. கலைச்செல்வம்***
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழியல் துறை
தமிழியற்புலம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை

***ஆய்வுச் சுருக்கம்*** – *தொன்மை மக்கள் தொடங்கி இன்றுள்ள சாதியச் சமூகம் வரையுள்ள அனைவரிடமும் சமயம் என்ற கருத்தாக்கம் படிப்படியாக வளர்ச்சியடைந்துள்ளது இப்படியான வளர்ச்சி நிலைகளில் குலக்குறிமுறையே சமயத்திற்கான விழைவை உருவாக்குகிறது என்று இவ்வாய்வுக் கட்டுரை எடுத்துரைக்கிறது. இக்கருத்திற்கு வலுசேர்க்கும் விதமாகக் குலக்குறிமுறைகளை நுட்பமாக ஆராய்ந்த மில் துர்ஹைம், சமயத்தின் தோற்றம், குலக்குறி முறையிலிருந்து தோன்றியது மனிதன் சமூக வாழ்வைத் தொடங்கியபோது ஏற்பட்டதே சமயம். சமூகத்தில் சமயமானது “புனிதம்”, “புனிதமற்றது” என்ற வேறுபாட்டை உருவாக்குகிறது. அதில் குலக்குறியானது சமயத்திற்கான விழைவை உண்டாக்குகிறது இந்த விழைவின் தொடக்கநிலை வடிவமாகக் குலக்குறி ஏற்பட்டது என்று கூறுகிறார். குலக்குறி முறையைச் சமயத்தின் தோற்றத்திற்கான தொடக்கநிலை என்று கூறலாம். இதற்கு அடுத்த நிலையான முன்னோர் வழிபாடு, போலிப்பொருள் வழிபாடு, மந்திரம் மற்றும் சடங்குமுறைகள் போன்றவற்றைப் பற்றிய நம்பிக்கையினால் உருவான வழிபாட்டு முறைகள் சமயமாதலின் விளைவுகளாகக் கருதப்படுகின்றன.*

***முக்கியச் சொற்கள்:*** *நாட்டுப்புறவியல், நாட்டார் சமயம், இனக்குழு, குலக்குறி வழிபாடு, முன்னோர் வழிபாடு*

ஒவ்வொருவரும் தம் வாழ்க்கையை ஒழுங்குபெற நடத்துவதற்கு சில நன்னெறி அல்லது நற்கருத்துக்களையும் வகுத்துக் கொள்கின்றனர். அந்நன்னெறிகளின் தொகுப்பே சமயம் ஆகும். ஓர் இனத்தின் மொழி, சமூகம், வாழ்க்கை முறை, நாகரிகம், பண்பாடு, தொழில்கள், நம்பிக்கைகள், எதிர்பார்ப்புகள், சிந்தனைகள் ஆகிய கூறுகளின் கூட்டுக்கலவையாகச் சமயம் விளங்குகிறது. ஓரினத்தின் வரலாற்றை அறிய அவ்வினம் சார்ந்திருந்த சமயமும் சமய நூல்களும் கொள்கைகளுமே முதன்மைச் சான்றுகளாக அமைகின்றன. அந்தவகையில் சமயம் என்ற கருத்தாக்கம், தமிழ்ச்சமூகத்தில் எவ்வாறு தோன்றி வளர்ந்து வந்துள்ளது என்பதை ஆராய்வதை இக்கட்டுரை நோக்கமாகக் கொண்டுள்ளது.

தொன்மை மக்களின் சமயம் தோன்றிய முறை குறித்து தர்கைம் புதிய கருத்தை முன்வைக்கிறார். இன்றுள்ள சமய முறைகளில் என்னென்ன பண்புகள் இன்றியமையாதன எனக் கருதப்படுகிறதோ (வழிபாட்டுப் பொருட்கள், அது பற்றிய நம்பிக்கை, நம்பிக்கையில் உறுதி கொண்டுள்ளோர், சடங்குகள் செய்தல் போன்றவை) அவை அனைத்தையும் கொண்ட ஆரம்பகாலச் சமயமாகக் குலக்குறிச் சமயம் தோன்றியது என்கிறார்.

## குலக்குறி

விலங்கு அல்லது தாவர உலகிலிருந்து பெயர்களைக் கடன் வாங்கும் முறைக்கு குலக்குறி என்று பொருள். இச்சொல் ஒஜிப்வா மொழியிலிருந்து உருவாக்கப்பட்டது. அவர்களது மொழியில் டோட்டம் என்ற சொல், டோட்டெயம் என்று உச்சரிக்கப்பட்டது. இதன் பொருள் ஒரு குலத்தின் குறியைச் சுட்டுவது என்று மார்கன் கூறுகிறார். இதை அப்படியே ஆங்கிலத்தில் டோட்டம் என்று பயன்படுத்தினர். இது தொடர்பான நம்பிக்கைகளை டோட்டமிசம் (Totemism) என்றனர்[1]

இன்று குலக்குறி என்னும் பொருளில் பேசப்படும் ‘totem’ என்னும் ஆங்கிலச்சொல் கிழக்கு வடஅமெரிக்காவில் உள்ள அல்கான்கின் (Algonkin) பழங்குடியினர் வழங்கும் ஆட்டோதீமன் (ototeman) என்னும் சொல்லோடு தொடர்புடையது. அவர்களின் மொழியில் இச்சொல்லுக்கு உடன்பிறந்தான் - உடன்பிறந்தாள் உறவு என்று பொருள். இச்சொல்லின் வேர்ச்சொல்லான ஒத்தி(ote) என்பதற்கு இரத்த உறவுடையவர்கள் என்பது பொருள். வடஅமெரிக்க இந்தியப் பழங்குடியினர் அப்பகுதியில் வணிகம் செய்யச் சென்ற ஆங்கிலேயர் ஒருவர் மூலம் கி.பி. 1792-இல் இச்சொல் ஆங்கிலேயரிடம் அறிமுகப்படுத்தப்பட்டு வழங்கித் எனத் திரிபுற்றது.[2]

பொதுவாகப் பழங்குடி மக்கள் பல்வேறு கூட்டங்களாக அல்லது குலங்களாகப் பிரிந்து வாழும் இயல்பினர். குலம் என்பது ஒரு பொதுவான முன்னோரிலிருந்து தோன்றிய வழிமரபினரின் உறவுமுறைக் குழுவைக் குறிக்கும் பதமாகும். குழுவின் பாதுகாப்பு மற்றும் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணுதல் ஆகியவற்றில் குலமாந்தர்கள் அனைவருக்கும் சமமான உரிமைகளும் பொறுப்புகளும் உண்டு. குலங்கள் ஒவ்வொன்றும் ஒரு விலங்கின் பெயரையோ தாவரம் அல்லது இதர இயற்கைப் பொருட்களின் பெயரையோ குலப்பெயராகக் கொண்டிருக்கும். குலத்தின் உறுப்பினர்கள் அனைவரும் தங்களுடைய குலத்தின் பெயருக்குரிய விலங்குகளையோ, இயற்கைப் பொருட்களையோ மிகவும் மரியாதையோடும் புனிதமான உணர்வுகளோடும் அணுகுவார்கள். இவ்வாறு குலங்கள் ஒவ்வொன்றும் தத்தமது அடையாளத்தை வெளிப்படுத்தும்வகையில் ஏற்றுக்கொள்ள விலங்கு அல்லது ஏனைய இயற்கைப் பொருளை மானிடவியலாளர்கள் டோட்டம் என்றழைத்தனர். இச்சொல்லுக்கு தமிழில் குலக்குறி, குலமரபுச்சின்னம் ஆகியவை கலைச்சொற்களாக விளங்குகின்றன.

குலங்கள் அவற்றிற்குரிய குலக்குறிகள், அக்குலக்குறிகள் தொடர்பான அந்தந்த குலங்களில் மக்களிடம் வழங்கும் நம்பிக்கைகள், புராணங்கள் போன்ற வழக்காறுகள், சடங்குகள், பழக்கவழக்கங்கள், உறவுமுறைகள் போன்ற அனைத்துவகையான கூறுகளையும் உட்கொண்டிருக்கும் நிறுவனமே குலக்குறியியல் ஆகும்.

தாவரங்கள், விலங்குகள், சடப்பொருட்கள் ஆகியவற்றோடு தனிமனிதரோ, ஒரு வர்க்கத்தினரோ கொண்டிருக்கும் குறியீட்டுத் தொடர்பினைக் குறிக்கும் சொல்தான் குலக்குறியியல். குறிப்பாகப் புறமண உறவுமுறையைக் கடைபிடிக்கும் குலங்களைச் சேர்ந்த மக்கள், விலங்குகளின் உருவங்களைத் தமது குலச்சின்னங்களாகப் பொறித்துக் கொள்வதன் மூலமும் புராணக் காலத்திய மாந்தர்களைத் தமது முன்னோராகக் கூறிக்கொள்வதன் வாயிலாகவும் மேற்சொன்ன குறியீட்டுத் தொடர்பினை வெளிப்படுத்துவர். மேலும் குலக்குறி விலங்கினுடைய தசையை உண்ணாமல் விலக்குதல், குலக்குறி இனப்பெருக்கம் அடைய வேண்டும் என்பதற்காகச் சடங்கு இயற்றுதல் என்பன போன்ற நடவடிக்கைகள் மூலமும் அத்தொடர்பு அவர்களிடம் வெளிப்பட்டது.[3]

இதிலிருந்து உறவுமுறையின் அடிப்படையில் கூட்டம் கூட்டமாக வாழும் மாந்தர்களுக்கும், தாவர வகைகள், விலங்கினங்கள், இயற்கைப் பொருட்கள் போன்றவற்றிற்கும் இடையில் புதிரான தொடர்பு நிலவுவதை அறிந்து கொள்ள முடிகிறது.

சில சமூகத்தினர் தம் குலத்தவர்கள் சில பொருள்களிலிருந்து தோன்றியவர்கள் என்றும், அதோடு வேறுபல முறைகளில் தொடர்புடையவர்கள் என்றும் நம்புவதால் அப்பொருளை அவர்தம் குலத்தின் குறியாகக் கொண்டுள்ளனர். இவ்வகையான நம்பிக்கையுடையோரின் குலக்குறிகளில் விலங்குகள், தாவரங்கள், இயற்கைப் பொருட்கள் ஆகியவையே முதன்மையாக உள்ளன. குலக்குறி அமைப்புடைய சமுதாயங்களிலிருந்து பெறப்பட்ட இனக்குழுவியல் தரவுகளைத் தொகுத்துப் பார்க்கும் போது குலக்குறி முறை, பல நிலைகளில் மாறுபட்டிருந்தாலும் அனைத்துச் சமுதாயங்களும் பல பொதுப்பண்புகள் கொண்டிருப்பதைக் காண முடிகிறது. குலக்குறி பொதுவாக விலங்காகவோ, தாவரமாகவோ, இயற்கைப் பொருளாகவோ இருக்கும்.

1. ஒத்த குலக்குறியுடையோர் அனைவரும் ஒருவழி மரபுடையவராக இருப்பர்.
2. குலக்குறியைக் கொண்டுள்ள குழுவினர் அதைத் துணைவன், உறவினன், பாது காப்பவன், மூதாதையர் என நம்புவர்.
3. ஒவ்வொரு குலத்தவரும் (குழுவினரும்) குலக்குறிக்குத் தனிப்பட்ட பெயரோ தனிக்குறியோ வழக்கில் கொண்டிருப்பர் பெரும்பாலும் குலக்குறியின் பெயரையே இக்குழுவினரும் கொண்டிருப்பர்.
4. தனி ஒருவருக்கென்று குலக்குறியும் அல்லது குழுவினர் அனைவருக்கும் பொதுவான குலக்குறியும் காணப்படுவதுண்டு. சில சமூகங்களில் முதன்மை குலக்குறிகளும் இடம் பெறுவதுண்டு.
5. குலக்குறியைச் சில நிகழ்ச்சிகள்தவிர பொதுவாக உண்ணவோ கொல்லவோ மறுப்பர்.
6. குலக்குறிக்கு முறைப்படியான வழிபாடுகள் செய்வர்.

குலக்குறியின் தோற்றம் குறித்த கருத்துக்கள்

குலக்குறியின் தோற்றம் குறித்து பல அறிஞர்கள் ஆராய்ந்தனர். அவர்களுள் மக்லீனன், ஆண்ட்ரூ லாங், லார்டு ஆவ்பரி, வில்கன், ஏ.சி.ஹாடன், எமிலி தர்கைம், சிக்மண்ட் பிராய்டு, வெர்ரியர் எல்வின் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். குலக்குறியின் தோற்றம் குறித்த ஆண்ட்ரூ லாங் ஒரு மாறுபட்ட கருத்தைத் தெரிவித்தார். இவரின் கருத்துப்படி உலகின் பல்வேறு சூழல்களில் வாழ்ந்த மனிதக்குழுவினர் அவரவர் இயற்கைச் சூழலில் காணப்பட்டனவற்றுள் சிறப்பானதொன்று வாழ்விற்கு முதன்மையானது எனக் கருதியதால் அதை அவர்தம் குலக்குறியாக ஏற்றுக்கொண்டனர்[4]. லார்டு ஆவ்பரி என்பார், இயற்கைப் பொருள்களை வணங்கியதிலிருந்து குலக்குறி தோன்றியது[5] என்கிறார்.

மனிதர்களின் ஆவி விலங்களிடம் சென்று உறையும் என்னும் நம்பிக்கையில் ஏற்பட்டதே குலக்குறி என்பார், வில்கன். அயலார் ஒரு கூட்டத்தினலைக் குறிப்பிடும் போது அம்மக்கள் எவ்வகை உணவை மிகுதியாக நம்பியிருந்தார்களோ அதன் பெயரால் குறிப்பிடத் தொடங்கியதால், ஏற்பட்டதே குலக்குறி என்பார் ஏ.சி.ஹாடன். ஒரு கூட்டத்தினரின் சமூக மனநிலையின் ஒன்றுபட்ட வெளிப்பாடாக அமையப் பெற்றதே குலக்குறி என்பார் எமிலி தர்கைம். இயற்கைச் சூழலுடன் இரத்த உறவுடைய கூட்டத்தினர் உள்ளார்ந்த மனநிலையில் கொள்ளும் உறவே குலக்குறி என்பார் சிக்மண்ட் பிராய்டு. வெர்ரியர் எல்வின், எதிர்பாராத வரலாற்று நிகழ்வால் ஏற்பட்ட கருத்து, பல இடங்களில் வாழ்ந்த

குடியினரிடம் பரவியதால் குலக்குறி நம்பிக்கை தோன்றியருக்கலாம் என்று கூறுகிறார்[6]. மேலும் வெர்ரியர் எல்வின், ஒருவன் கழுகைக் கொன்ற சில காலம் கழித்து கண்பார்வை இழக்க நேரும்போது அதைக் குணப்படுத்த மந்திரவாதியிடம் சென்றிருப்பான். அவனது கடந்தகால வரலாற்றை ஒன்றுபடுத்திப் பார்க்கும் மந்திரவாதி கழுகைக் கொன்றதற்கும் கண்பார்வை போனதற்கும் தொடர்புபடுத்தி அதை இனிமேல் கொல்லக்கூடாது என்ற எடுத்துக்காட்டைச் சுட்டிக்காட்டி இத்தகைய பல்வேறு நிகழ்வுகளால் குலக்குறிகள் தோன்றியிருக்கும்[7] என்று கூறுகிறார்.

தொன்மைக் குடியினர் காடுகள் அடர்ந்த சுற்றுச் சூழலுடன் வாழ்ந்ததால் அவர்கள் பகுதியல் வாழ்ந்த ஆற்றல் மிக்க விலங்குகளுடன் தொடர்பு கொண்டால் வேட்டையின்போது தம் குலத்தவருக்கு ஆற்றல் கிடைக்கும் என நம்பினர். அதோடு வேட்டையின்போது குறிப்பிட்ட விலங்கைக் கொல்லாமல்விட்டால் அது அவர்களின் வேட்டைக்குத் துணைபுரியும் எனவும் நம்பினர். மீன்களைப் போல் தங்கள் குலத்தவர்கள் பெருக வேண்டும் என எண்ணி மீனைக் குலக்குறியாகக் கொண்டனர். இவ்வகைக் குலக்குறி நம்பிக்கை, வேட்டுவச் சமுதாயங்களிலும் அதையடுத்து எளிய முறையில் தொடங்கிய வேளாண் வாழ்க்கையிலும் இருந்திருந்தன.

குலக்குறியின் சாராம்சமாக, தொல்லினப் பழங்குடி மக்கள் அமைப்பில் உள்ள ஒவ்வொரு குலமும் அதனை ஒரு விலங்கு அல்லது செடியோடு இணைத்துக் கொள்கிறது. அது அதன் குலக்குறி எனப்படும். அந்தக் குலத்தைச் சாார்ந்தவர்கள் குலக்குறியோடு தங்களை நெருக்கமாகவும் அதிலிருந்து வந்தவர்களாகவும் தங்களைக் கருதுகிறார்கள். ஊதாரணமாக, நாய் குலத்தைச் சார்ந்தவர்கள் தங்களை நாய்களாகக் கருதுகிறார்கள்[8] என்று தேவிபிரசாத் சட்டோபாத்யாயா கூறுகிறார்.

குலக்குறியைப் பற்றி ஆராய்ந்து கூறிய மார்கன், பிரிஃபோல்ட் போன்ற அறிஞர்கள் இன்றும் நாகரிகம் இல்லாமல் வாழ்ந்து வரும் பழங்குடி மக்களிடத்தில் ஆராய்ச்சியை மேற்கொண்டு குலக்குறியைப் பற்றி" கூறினார்கள். அவர்கள் இலக்கியங்களிலிருந்து சான்றேதும் காட்டவில்லை. ஏனென்றால் அப்படிப்பட்ட இலக்கியங்கள் அவர்களிடம் இல்லாமல் இருப்பதே எனலாம்.

லோகாய்தா என்ற நூலை எழுதிய தேவிபிரசாத் சட்டோபாத்யாயா சமஸ்கிருதத்தில் உள்ள வேதங்களில் குலக்குறியைப் பற்றிய செய்திகள் இருப்பதாகக் கூறி நிறுவுகிறார் வேதங்களில் மிருகங்கள், பறவைகள், செடிகள் ஆகியவை குலக்குறியாக இருந்திருக்கலாமென்று மிகுந்த சிரமப்பட்டு நிறுவுகிறார் என்றும் வெ.கோவிந்தசாமி கூறுகிறார்.

சான்றாக, ஒன்றைப் பார்ப்போம். சாந்தோக்ய உபநிஷத்தின் முதல் அத்தியாயத்தின் பன்னிரண்டாவது பிரிவில் உள்ள ஒரு பகுதியை அவர் எடுத்துக் கொள்கிறார்.

இந்தப் பகுதியில் வெள்ளை நாய் ஒன்று நடுவில் இருக்க, அதைச் சுற்றிப் பல நாய்கள் கூடி, உணவு வேண்டி தேவனையும் வருணனையும் பிரஜாபதியையும் சாவித் திரியையும் வேண்டுகின்றன. இப்படிப் பாடும் நாய்கள் உண்மையில் நாய்களல்ல் நாய்க் குலத்தைச் சுற்றியுள்ள மனிதர்களே என்று சட்டோபாத்யாயா நிறுவுகிறார். அவருக்கு இன்னும் சில பெயர்கள் கிடைக்கின்றன. 1. சுகலா (பாம்பு) 2. மந்துகேயா (தவளை) 3. சர்துலியா (புலி)

4. தைத்திரியா (தைத்திரா என்ற பறவை) 5. வுராகா (பன்றி) 6. சாகலேயா (ஆடு) 7. சேளனகா (நாய்) 8. கௌசிதாகி(ஆந்தை) என்பன போன்றவையே அவை. நான்கு வேதங்களிலும் குலக்குறிகள் பெயரை சட்டோபாத்யாயா தேடித்தேடிக் கிடைப்பன இவையே[9]

குலக்குறியைப் பற்றி தமிழிலக்கியத்திற்கு வரும் போது வியப்படையும் அளவுக்கு ஏராளமான சான்றுகள் கிடைக்கின்றன. புலவர்கள், அரசர்கள் ஆகிய பெயர்களில் பறவைகள், விலங்குகள் மட்டுமின்றிச் செடிகள் போன்ற குலக்குறிகளும் அளவறிந்து காணப்படுகின்றன.

புலவர்களின் பெயர்களில் குலக்குறிகள் இருப்பதை இக்கட்டுரை முதலில் எடுத்துரைக்கிறது.

### சங்கப் புலவர்களின் பெயர்களில் குலக்குறிகள்

### பறவைகள்

#### ஆந்தை

வடமொழி வேதங்களில் கௌசிதாகி என்ற பெயர் காணப்படுகிறது. இதன் பொருள் ஆந்தை என்பதாகும்.[10] ஆந்தை குலக்குறியாக உலகில் பல பழங்குடி மக்களிடையே இருந்திருக்கிறது. தமிழில் அஞ்சில் ஆந்தையார், அஞ்சில் ஆந்தை மகள் நாகையார், ஓதலாந்தையார், சிறைக்குடி ஆந்தையார், பிசிராந்தையார் போன்ற பெயர்கள் நேரடியாக ஆந்தை என்ற பறவைப் பெயரைத் தம்மிடம் கொண்டுள்ளன. வடமொழி, தமிழோடு தொடர்பு கொண்டபின் கௌசிகம் என்ற வடமொழிச் சொல்லில் அமைந்த பெயர்கள் தமிழிலும் காணப்படுகின்றன.

#### கிளி

கிளிக்குலங்கள் பழந்தமிழ் மக்களிடையே அதிகமாக இருந்ததற்கான சான்றுகள் உள்ளன. கீரம் என்ற சொல் கிளியைக் குறிப்பதாகும். கீரத்தைத் தமது பெயரில் கொண்டுள்ள சங்கப் புலவர்களின் பெயர்கள் உள்ளன. அவை: அல்லங்கீரனார், இம்மென்கீரனார், இளங்கீரனார், பொருந்தில் இளங்கீரனார், எயினந்தை மகனார் இளங்கீரனார், அந்தி இளங்கீரனார், நக்கீரர், நக்கீரனார், மதுரை நக்கீரனார், கணக்காயர் மகனார் நக்கீரனார், மதுரை கணக்காயர் மகனார் நக்கீரனார், மோசி கீரனார், மூலங்கீரனார், சேந்தங்கீரனார், படுமாத்து மோசிகீரனார், கீரங்கீரனார், கிடங்கில் காவிதிக்கீரங்கண்ணனார், காசிபன் கீரனார், குறுங்கிரனார், குடவாயில் கீரனார், குடவாயில் கீரக்கனார், தும்பிசேர் கீரனார், கழார்க்கீரன் எயிற்றியார், வினைத்தொழில் சோகீரனார், இடையன் நெடுங்கீரனார், மடல் பாடிய மாதங்கீரனார், உவர்க்கண்ணூர் புல்லங்கீரன்.

கிளியைக் குறிக்கும் மற்றொரு சொல் தத்தம் என்பதாகும். கோவதத்தர், குழல் தத்தர் என்று தத்தம் என்ற சொல்லைத் தனது பெயரில்கொண்ட புலவர்கள் இருந்திருக்கின்றனர். இதிலிருந்து கீரன் குலம், தத்தங்குலம் என்ற இரு கிளி குலங்கள் இருந்ததை அறிய முடிகிறது.

### விலங்குகள்

விலங்குகளில் யானை, குரங்கு, குதிரை, எருமை, வெள்ளாடு போன்று பலவும் குலக்குறிகளாக இருந்துள்ளன. உலகின் பல பாகங்களிலும் விலங்குகள் குலக்குறியாக இருந்ததற்கான சான்றுகள் கிடைத்திருக்கன்றன. கங்காரு ஆஸ்திரேலியப் பழங்குடி மக்களிடத்தில் குலக்குறியாக உள்ளதென்று பிரிஃபோல்ட் கூறுகிறார். மான், நாய், எருமை போன்ற விலங்குகள் குலக்குறியாகக் காணப்படுகின்றன. வடமொழி வேத இலக்கியத்திலும் பசு, நாய், தவளை, வெள்ளாடு, மீன், ஆமை போன்ற விலங்குகள் குலக்குறியாகக் காணப்படுகின்றன.[11]

**குரங்கு**

தமிழ்ப் புலவர்கள் பெயர்களில் நான்கு பெயர்கள் குரங்கைக் குறிப்பிடுகின்றன. ஆதிமந்தியார், கடுவன் மள்ளனார், கடுவன் இளமள்ளனார், மதுரைத் தமிழ்க்கூத்தனார் கடுவன் மள்ளனார் போன்ற பெயர்களின் மூலம் குரங்கு குலங்கள் இருந்தன என்பதும் அவை கடுவன், மந்தி என்ற இருவகையிலும் இருந்தனவென்றும் அறியலாம்.

**எருமை, பன்றி**

எருமை வெளியனார், எருமை வெளியனார் மகனார்கடலனார்என்றஇரண்டுபுலவர்கள் எருமைக் குலத்தைச் சார்ந்தவர்கள். மேலும் எழூஉப் பன்றி நாகன் குமரனார் என்ற பெயரினால் பழந்தமிழ் மக்களிடையே பன்றி குலம் இருந்திருக்கலாம் என்று துணிய முடிகின்றது.

**நரி, வெள்ளாடு**

நரிவெரூஉத்தலையார், தூங்கில் ஓரியார் (ஓரி-நரி) என்ற நரிக்குலத்தைச் சார்ந்த பெயர்களும் வெள்ளாடியனார், நல்வெள்ளியார் (வெள்ளி - வெள்ளாடு) என்ற வெள்ளாட்டுக் குலத்தைச் சார்ந்த பெயர்களும் இருந்திருக்கின்றன.

**மரஞ்செடி, கொடிகள்**

மரஞ்செடி, கொடிகள் குலக்குறியாக இருப்பதற்குக் காரணம் செழிப்பு ஒன்று தான். பழங்குடி மக்களுக்குக் குலம் தழைப்பதுதான் முக்கியமானதாக இருந்தது. குலம் பல்கிப் பெருகினால் தான் பாதுகாப்பு அதிகம். எனவே மனித உற்பத்தி உணவு உற்பத்தியோடு சமமான முக்கியத்து வத்தைப் பெறுகிறது. பழங்குடி மக்கள் ஒரு விதையிலிருந்து செடிகள் முளைப்பதையும் ஒரு கொடியில் எண்ணிறந்த மலர்கள் மலர்வதையும் பார்த்து, அந்தக் கொடியை அல்லது செடியை, தான் சூடிக்கொள்வதன் மூலம் தனது இனவிருத்தித்திறன் பெருகுகிறதென்றும் தனது குலத்திற்குக் குலக்குறியாகக் கொண்டால், குலம் அதுபோல் பல்கிப் பெருகுமென்றும் நம்புகிறார்கள். எனவே, மரம், செடி, கொடிகளைக் குலக்குறியாகக்கொண்டு, தான் அணிந்துகொள்வதும் வீட்டுக்கருகில் வளர்ப்பதும் வேலியில் வைப்பதும் பழக்கமாகக்கொண்டு அந்தக் குலமாகவே மாறிவிடுகிறார்கள். குலக்குறியை இப்படித் தெரியக் காட்டுவதன்மூலம் தாங்கள் செழிப்பு மிக்கவர்கள் என்றும் தங்கள் குலத்தைப் பன்மடங்காகப் பெருக்கும் சக்தி பெற்றவர்களென்றும் அறிவித்துக் கொள்கிறார்கள். இந்தப் பழக்கம் விதிவிலக்கில்லாமல் உலக முழுவதிலுமுள்ள பழங்குடி மக்களிடம் காணப்படுகிறது.

**முல்லை**

அள்ளூர் நன்முல்லையார், காவன் முல்லைப் பூதரத்தனார், காவன் முல்லைப் மழுக்கரத்தனார், காவன் முல்லைப் பூக்கரத்தனார், காவன் முல்லைப் பூச்சரத்தனார் ஆகிய பெயர்கள் முல்லையைக் குலக்குறியாகக் கொண்டதற்கான சான்றுகளாகும்.

**நெய்தல்**

நெய்தல் தத்தனார், கொடியுர் கிழார் மகனார் நெய்தல் தத்தனார், நெய்தல் சாய்த்துய்த்த ஆவுர்கிழார் போன்ற பெயர்கள் நெய்தல் என்னும் செடி குலக்குறியாக இருந்ததைக் குறிக்கின்றன.

**பசலை**

மாறோக்கத்து நப்பசலையார், குமுழி ஞாழலார் நப்பசலையார், போந்தைப் பசலையார், காமக்கணிப் பசலையார் ஆகிய பெயர்கள் பசலைக் கொடியைக் குலக்குறியாகக் கொண்டிருந்ததற்கான சான்றுகளாகும்.

**சங்கப் பாடல்களில் குலக்குறிகள்**

சங்கப் புலவர்களின் பெயர்களில் மட்டுமல்லாமல் சங்கப் பாடல்களிலும் குலக்குறிகள் பல இடங்களில் காணப்படுகின்றன. இக்குலக்குறிகளில் மரஞ்செடி, கொடிகளே அதிகம் காணப்படுகின்றன. மனிதனைப் பற்றிப் பாடும்பொழுதுதான் அவனது குலக்குறியாகிய விலங்குடன் சேர்த்துப் பாட முடியும். ஆனால், செடி, கொடிகள், ஊரைச் சொல்லும்பொழுதும் வீட்டைச் சொல்லும்பொழுதும் குலக்குறியைச் சொல்லாமல் இருக்க முடியாது. குலத்தின் குறியான மரத்தை ஊரில் பல இடங்களிலும் வீட்டின் அருகாமையிலும் வளர்ப்பதுண்டு. வீட்டிற்கும் ஊருக்கும் இடப்படும் வேலியில் குலக்குறியாகிய செடி நட்டு வளர்க்கப் படுவதுண்டு. எனவே, ஊரைப் பற்றியும் வீட்டைப் பற்றியும் கூறும்பொழுது குலக்குறியையும் சேர்த்தே பல இடங்களில் கூற வேண்டி நேரிடுகிறது. எனவேதான், பறவை, விலங்கு முதலியவற்றைவிட மரஞ்செடி, கொடிகள் குலக்குறியாக இருந்ததற்கான சான்றுகள் பழந்தமிழ் இலக்கியத்தில் அதிகம் கிடைக்கின்றன. மரஞ்செடி, கொடிகளில் நொச்சி, நெய்தல், முல்லை, குவளை, காந்தள், குறிஞ்சி, வேங்கை, தாழை ஆகிய பெயர்களே அதிகம் குலக்குறிகளாக சங்கப்பாடல்களில் காணப்படுகின்றன.

**நொச்சி**

**நொச்சி மனைகெழு பெண்டிர்**

**(அகம்.203)**

**மனையிள நொச்சி மௌவல் வான்முகை**

**(அகம்.21)**

**மனைய தாழ்வின் நொச்சி**

**(அகம்.23)**

**மயிலடி யிலைய மாக்குரல் நொச்சி மனைநடு மௌவலொடு அவிழ**

**(நற்.115)**

**மனைமர நொச்சி மீமிசை மாச்சினை**

**(நற்.246)**

**மனையில் நொச்சியை வளர்த்ததற்கான சான்றுகளே இவை. மேலும்,**

**மௌவலொடு மலர்ந்த மாக்குரல் நொச்சியும்**
**அவ்வரி அல்குல் ஆயமும் உள்ளாள்**

**(அகம்.117)**

என்ற பாடலில் நொச்சி குலக்குறியாக இருந்ததற்கான சான்று தெளிவாகக் கிடைக்கின்றது. ஒரு குலத்தினர் தமக்கென ஒரு குலக்குறியை உடையவர்களாக இருக்கின்றனர். அந்தக் குலத்தைச் சேர்ந்த எல்லோரும் மிகுந்த ஒற்றுமையுடையவர்களாகவும் குலத்துக்கு ஏற்படும் ஆபத்தை வெல்வதில் ஒருமித்த ஆர்வமுடையவர்களாகவும் இருக்கின்றனர். தமது குலம் உடைவதை அவர்கள் அனுமதிப்பதில்லை.

எனவே, குலத்தைவிட்டு நீங்கிப் போவதுதான் ஒருவர் குலத்துக்குச் செய்யும் பெரிய துரோகமாகும். இப்படிக் குலத்தைவிட்டுப் போவது ஒரு கட்டத்தில் தவிர்க்க முடியாததாகிறது. இது பழங்குடி மக்களின் குல அமைப்பில் புரட்சிகரமான மாறுதலை உண்டாக்குகிறது. காட்டுமிராண்டி வாழ்க்கையில் மற்ற எல்லாப் புரட்சி களையும் நடத்திய பெண்களே இந்தப் புரட்சியையும் நடத்துகிறார்கள். அப்படிப் போய்விட்ட ஒருத்தியை எண்ணித்தான் அவள் தாய், நொச்சிக் குலத்தையும் நினைக்காமல், அக்குலத்திலுள்ள பிற பெண்களையும் நினைக்காமல் போய்விட்டாள் என்று வருந்துகிறாள். இந்தத் தாய் கூடுதலாக இன்னுமொரு தகவலையும் கூறுகிறாள். குலக்குறியாகிய செடியை வீட்டுக்கு அருகில் நட்டு வைப்பது மட்டுமல்ல. அதன் தழைகளை அல்லது கொத்துக்களை உடையாக உடுத்திக்கொள்வதும் உண்டு. அதன் நோக்கம் தமது குலத்தை, குறியை வெளிப்படையாகத் தெரியப்படுத்துவதுதான்.

**காந்தள்**

**கானவன் எய்த முளவுமான்**
**கொழுங்குறை**
**தேங்கமழ் கதுப்பின் கொடிச்சி மகிழ்ந்து கொடு**
**காந்தளஞ் சிறுகுடி பகுக்கும்**
**ஓங்கிமலை நாடன்நின் நசையினானே**
**(நற்.85)**

என்ற பாடலில், அவர்கள் காந்தள் குலத்துக்காரர்கள். அவர்களில் ஒருவன் ஒரு மானைக் கொன்று, கொண்டு வந்துவிட்டான். அங்கிருந்த பெண் அந்த மான்கறியைக் காந்தள் சிறுகுடிக்கெல்லாம் பகுத்துத் தருகிறாள், என்ற செய்தியிலிருந்து காந்தள் குலக்குறியாக இருந்துள்ளதை அறிய முடிகிறது.

**வேங்கை**

**வேங்கை கமழும் எம் சிறுகுடிச**
**(குறுந்.355)**

என்ற குறுந்தொகைப் பாடலடி, வேங்கை மரத்தை வீட்டை ஒட்டி வளர்ப்பதைக் கூறுகிறது. வேங்கை மரமும் குலக்குறியாக இருந்ததற்குச் சான்றாகும்.

பழங்குடி மக்களிடமட்டுமல்லாது இன்றைய தற்காலத் தமிழர்களிடையேயும் இந்தப் பழக்கம் இருப்பதையும் காண முடிகிறது. சேலம், திருச்சி, கோவை போன்ற மாவட்டங்களில் வாழும் விவசாயப் பழங்குடி மக்களான கவுண்டர் இனத்தைச் சேர்ந்த மக்களிடமும் இந்தக் குலக்குறித்தன்மை இன்றும் இருப்பதை அறிய முடிகிறது.

கவுண்டர்களில் மொத்தம் அறுபது குலங்கள் இருந்ததாகவும், இப்போது வழக்கில் சுமார் இருபத்தைந்து குலங்கள் மட்டுமே இருப்பதாகவும் கொங்கு வேளாளர் என்ற நூல் வழியாக அறிய முடிகிறது.

குலக்குறிகள் கவுண்டர்களிடம் இன்னும் இருப்பதற்குக் காரணம் அவர்கள் இன்று வரை விவசாயத்தில் ஈடுபட்டிருப்பதுதான். விவசாயத்தில் தொடர்ந்து ஈடுபட்டுள்ள எல்லா மக்களிடமும் குலக்குறிகள் மட்டுமல்ல பழங்காலச் சமுதாயத்தின் சின்னங்கள் மற்றும் பழக்கவழக்கங்கள் நீடிக்கின்றன.

குலக்குறியைப் பற்றி விரிவான ஆய்வினைச் செய்த மார்கன், அமெரிக்கப் பழங்குடிகளின் குலங்கள் (கோத்திரம்) ஒரு விலங்கிலிருந்து அல்லது உயிரற்றப் பொருளிலிருந்து அவற்றின் பெயர்களைப் பெற்றனர். ஆரம்ப காலத்தில் சமுதாயத்தில் ஒருவனது தனித்தன்மை என்பது குலத்தில் இணைந்திருந்தது. குலமே முதன்மையானதாகக் கருதப்பட்டது என்று கூறுகிறார். இனக்குழுச் சமுதாயத்தில் குலக்குறிகள் கடவுளாக வழிபடப்பட்டன. பிற்காலத்தில் குலக்குறியிலிருந்து குலதெய்வ வழிபாடு தோன்றியது. சமயங்களின் செல்வாக்கு மேலோங்கியபோது சில குலக்குறிகள் சமயங்களுடன் இணைக்கப்பட்டுள்ளன. இன்றும் பல தனித்தன்மையுடன் வளர்ந்து வழிபாட்டிலுள்ளன.

உலகின் நீண்ட நெடிய மரபுடைய எந்தவொரு சமூகத்திற்கும் சமயமரபு என்று ஒன்றுண்டு. இச்சமய மரபில் இருந்தே அடுத்தடுத்த மரபின் தொடர்ச்சியும் மாற்றமும்கொண்ட மலர்ச்சி ஏற்பட்டது. இப்படி மலர்ச்சியின் அசைவியக்கம் சீரான மாற்றத்தையே அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. அந்தவகையில் தொன்மை மக்களன் தொடங்கி இன்றுள்ள சாதியச் சமூகம் வரையுள்ள அனைவரிடமும் சமயம் என்ற கருத்தாக்கம் படிப்படியாக வளர்ச்சியடைந்து இன்றுள்ள பெருஞ்சமயமாக தோன்றி வளர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இப்படி மலர்ச்சி நிலைகளில் குலக்குறி முறையே

சமயத்திற்கான விழைவை உருவாக்குகிறது என்று இவ்வாய்வுக் கட்டுரை எடுத்துரைக்கிறது.

குலக்குறி முறையைச் சமயத்தின் தோற்றத்திற்கான தொடக்கநிலை என்று கூறலாம். இதற்கு அடுத்த நிலையான முன்னோர் வழிபாடு, போலிப்பொருள் வழிபாடு, மந்திரம் மற்றும் சடங்கு முறைகள் போன்றவற்றைப் பற்றிய நம்பிக்கையினால் உருவான வழிபாட்டு முறைகள் சமயமாதலின் விளைவுகளாகக் கொள்ளப்படுகின்றன.

## குறிப்புகள்

1. சுப்பிரமணியன், தி. (2016). *தொல்பழங்காலம்*, ப. 192.
2. பக்தவத்சல பாரதி. (2016). *பண்பாட்டு மானிடவியல்*, ப. 505-506.
3. தனஞ்செயன். ஆ. (2012). *குலக்குறியியலும் மீனவர் வழக்காறுகளும்*, ப. 4.
4. பக்தவத்சல பாரதி. (2016). *பண்பாட்டு மானிடவியல்*, ப. 507.
5. மேலது, ப. 509.
6. மேலது, ப. 509.
7. மேலது, ப. 509-510.
8. தேவி பிரசாத் சட்டோபாத்யாயா. (2014). உலகாயதம், ப. 110.
9. கோவிந்தசாமி, வெ. (2012). (ப.ஆ), இந்திய தத்துவ மரபு: சில பார்வைகள், ப. 95.
10. தேவி பிரசாத் சட்டோபாத்யாயா. (2014). உலகாயதம், ப. 105.
11. கோவிந்தசாமி, வெ. (2012). (ப.ஆ). *இந்திய தத்துவ மரபு: சில பார்வைகள்*. ப. 98.